# நிலவு அவள்



மருதமுனை எஸ் ஏ ஹப்பார்

கவிதைகள்

வெளியீடு:
டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம்,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவு அவள்

மருதமுனை எஸ் ஏ ஹப்பார்

கவிதைகள்

வெளியீடு:
டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம்,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NILAVU AVAL**
**Maruthamunai S A GAFFAR Kavithaikal (Collection-1)**

| | | |
|---|---|---|
| Subject | : | Poetry (Tamil) |
| First Edition | : | April 2019. |
| Published by | : | Digital Information System, Maruthamunai. |
| Book Layout | : | S.A. Jezeem |
| Print | : | Jesa Grafix, Maruthamunai. |



| | | |
|---|---|---|
| Author | : | S A Abdul Gaffar<br>(Maruthamunai S A Gaffar)<br>378/2, Zam Zam Road,<br>Maruthamunai-03 #32314,<br>Sri Lanka. |
| e-mail | : | kavignarsagaffar@gmail.com |
| Contact | : | 0718723928, 0765450928 |

**நிலவு அவள்**
**மருதமுனை எஸ் ஏ ஹப்பார் கவிதைகள் (தொகுதி-1)**

| | | |
|---|---|---|
| பொருள் | : | கவிதை (தமிழ்) |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல் 2019. |
| வெளியீடு | : | டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம், மருதமுனை. |
| நூல் வடிவமைப்பு | : | எஸ்.ஏ. ஜெசீம் |
| அச்சு | : | ஜெஸா கிறபிக்ஸ், மருதமுனை. |



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | எஸ் ஏ அப்துல் கப்பார்<br>(மருதமுனை எஸ். ஏ. ஹப்பார்)<br>378/2, ஸம் ஸம் வீதி,<br>மருதமுனை-03 32314, இலங்கை. |
| மின்னஞ்சல் | : | kavignarsagaffar@gmail.com |
| தொடர்பு | : | 0718723928, 0765450928 |



| | | |
|---|---|---|
| ISBN | : | 978-624-95272-0-1 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியத்துடனான உறவு.

உறவு என்றாலே இனிமையானதுதான். அதுபோலத்தான் இலக்கியத்துடனான உறவும் இனிமையானது; இன்பமானது; இறுக்கமானது; அழகானது; நித்திரை இல்லா இரவுகளை நிரந்தரமற்றதாக்கும் சக்தியுடையது. அந்த சக்திதான் கடந்த 40 வருட காலமாக என்னை ஆட்கொண்டு ஆர்ப்பரிக்கிறது.

1977-78 காலப் பகுதி எனது மாணவப் பருவம். வயது 18. பக்கத்து வீட்டு ஆர்மோனியமும் தபேலாவும் கவனத்தை ஈர்க்கும் போதெல்லாம் அங்கு சென்று ஆவலாய்ப் பார்த்திருப்பேன். அப்போதுதான் எனக்கு தரமான இலக்கியச் சஞ்சிகைகளையும் நாவல்களையும் இலவசமாகப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அந்த நன்றிக்குரிய பக்கத்து வீட்டுக்காரர் வேறு யாருமல்ல, காலஞ்சென்ற இசைவாணர், கலாபூஷணம் மருதூர் வாணர் அவர்கள்தான். அன்று தொட்ட எனது இலக்கிய உறவு இன்று வரை இனிமையாக, இளமையாகத்தான் இருக்கிறது.

1977 காலப் பகுதியில் சிறுகதை, உருவகக் கதை, கவிதை என எழுத ஆரம்பித்த நான் எனது தந்தையின் அறிவுரைக்கு மதிப்பளித்து எழுத்தை நிறுத்தி படிப்பை மேற்கொண்டு ஓர் அரச தொழிலையும் பெற்றுக் கொண்டேன். வங்கித் தொழில் வளமாக இருந்தாலும் எழுதுவதற்கான நேரம் வழங்க மறுத்துவிட்டது.

இருந்தும் 2004-2006 காலப் பகுதியில் எழுதி வெளிவந்த கவிதைகளில் 25 கவிதைகளைத் தெரிவு செய்து முதற் தொகுதியாக வெளியிட எண்ணி எடுத்த முயற்சிதான் இக் கவிதைத் தொகுப்பு.

எழுத்துலகிற்கு என் பங்களிப்பென்று ஒன்றும் இல்லைதான். ஆனாலும் நான் எழுதிய சிறுகதைகளும் கவிதைகளும் விரல்விட்டு எண்ணக்கூடியவை ஆயினும் அவை பலரால் ரசிக்கப்பட்டன; பாராட்டப்பட்டன; இன்னும் சில பரிசில்களையும் பெற்றுத் தந்தன. மகிழ்ச்சி; மன நிறைவு.

இவ்வேளை நால்வர் பற்றிய நினைவுக் கீற்றுகள் பளிச்சிடுகின்றன.

### 1. உமா வரதராஜன் அவர்கள்.

நூல் வெளியீட்டு நிகழ்வுகளின் போது என்னைக் காணும் போதெல்லாம் உமா வரதராஜன் அவர்கள் "எழுதித்தான் இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டுமென்பதல்ல; உங்களது இலக்கிய உறவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தும் மறையா
என் பெற்றோர்

பாசமிகு தந்தை
**எஸ். செய்னுலாப்தீன்**
(ஓய்வுபெற்ற அதிபர்)
அவர்கட்கும்

அன்புத் தாய்
**எம். ஏ. முஸ்தபா வீவி**
அவர்கட்கும்

மற்றும்

என்னவள்
**எஸ். ஏ. ஆர். எம். செய்யிதா ஆபிதா**
அவர்கட்கும்

**சமர்ப்பணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வகைப் பங்களிப்புத்தான்'' என்பார். நிற்க. அது வேறு விடயம்.

1987ம் ஆண்டு உமா வரதராஜன் எழுதிய 'ஜெனி' என்ற சிறுகதையில் வரும் காலத்தால் அழியாத வரிகள், நான் பலமுறை வாசித்து இரசித்த வரிகள்:

**''அவள் நீட்டிய பயணப் பையை நான் வாங்கிக் கொண்டேன். அவள் ஏறி, மூச்சு விட்டாள். இந்தச் சந்திப்பை என்னைப் போலவே அவளும் எதிர்பார்த்திருக்க முடியாது. நான் என் பயணப் பையை விலக்கி அவள் உட்காருவதற்கு வசதி செய்து தந்தேன். அவள் உட்கார்ந்தபின் அவளைப் பார்த்து புன்னகைத்தேன்.''**

இங்கு, ஓசையில்லா ஒரு நிழற்படம் நம் கண் முன்னே ஓடுவதைக் காண முடிகிறது. அவரது எழுத்துக்களை மீண்டும் மீண்டும் வாசிக்கும் போது ஒருவகை ஆச்சரியத்தையும் நமது முதிர்ச்சியற்ற தன்மையையும் வெளிக்கொணர்வது பிரமிப்பாக இருக்கிறது. அதுதான் நல்ல இலக்கியத்தின் பண்பு எனவும் எண்ணத் தோன்றுகிறது.

## 2. சோலைக்கிளி அதீக் அவர்கள்.

1978 - நானும் எனது நண்பன் எம். எம். அபுல் கலாம் அவர்களும் சோலைக்கிளியின் வீடு தேடிச் சென்று ''வெண்ணிலா'' இதழ்களைக் கையளித்த தருணம் பணம் தந்து வாழ்த்தியனுப்பியதை மறக்க முடியாது.

சுனாமியின் பின் ஒரு நாள் சோலைக்கிளியை மருதமுனைக் கடற்கரையில் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. அப்போது எடுத்த எடுப்பிலேயே "உன்னைப் பல வருடங்களாகத் தேடினேன். காணவில்லையே" என்றார். அவர் தேடியது என் உருவத்தையோ உடலையோ அல்ல. என் கவிதைகளைத்தான். அவர்தான் மாயக் கவிஞனாயிற்றே. அவரது வார்த்தையைப் புரிவதற்கும் கவிதை ஞானம் வேண்டும் என்பர்.

2017 ஒக்டோபர் முகநூலில் பதிவிடப்பட்ட 'பாலோடிப் பழம் பொறுக்கி' தொடரின் 'கவிதை நமக்கானதே இல்லை' என்ற கவிதையின் முதல் வரிகள் என்னை வெகுவாக கவர்ந்தன:

**"ஒரு கவிதையைப் பொழியும்போது**
**வானம் இருட்டுவதுபோல**
**நாமும் இருட்டுகிறோம்**
**மின்னல்**
**நமக்குள்ளும் அடிக்கிறது**
**காற்று வீசி**
**நம் கடலும் பொங்கி வழிகிறது."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கு முடிசூடி அழகு பார்த்தவர்களில் முன்னோடி சோலைக்கிளி. இன்று அவர் ஓர் உலகக் கவிஞன் அல்லது உலகைத் திரும்பிப் பார்க்க வைக்கப் பிறந்த கவிஞன் எனலாம்.

### 3. பாவலர் பஸீல் காரியப்பர் அவர்கள்.

1978 இலங்கை பல்கலைக் கழகக் கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய கவிதைப் போட்டியில் இவரது 'தங்கம்மா' கவிதை முதற் பரிசுக்குரிய தங்கப் பதக்கம் வென்றது. இதனை 08.07.1978 அன்று சம்மாந்துறைப் பொதுமக்கள் பெரு விழாவாகக் கொண்டாடி 'தங்கம்மா' கவிதையினைச் சிறு நூல் வடிவில் வெளியிட்டு மகிழ்ந்தனர்.

இவ்விழாவிற்கு ஒரு துண்டுப் பிரசுரம் அவசரமாக அச்சிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் முதல் நாள் இரவு 8.00 மணியளவில் என் தாய் வீடு தேடிவந்து அதை அச்சிட்டுத் தருமாறு பாவலரும் இன்னும் சிலரும் வேண்டி நின்றனர். அப்போது நான் மருதமுனை இளம்பிறை அச்சகத்தில் எழுத்துப்பிழை திருத்துபவராகவும் விளம்பர வடிவமைப் பாளராகவும் வேலை செய்த காலகட்டம். வேறு வழியின்றி நானே அச்சுக் கோர்த்து, சரி பிழை பார்த்து, அச்சிட்டுக் கொடுக்க இரவு 11.00 மணியாகிவிட்டது.

அந்த 3 மணித்தியாலங்களும் என் பின்னாலேயே நின்று அவ்வப்போது அவர் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு கவிதை. என்னே ஆச்சரியம்! அவரே இயற்றி, அவரே இசையமைத்து, அவரே சொந்தக் குரலில் பாடும் திறமை பெற்றவர் என்பதை பின்னர்தான் தெரிந்து கொண்டேன்.

அவரது 'தங்கம்மா' கவிதையில் வரும் அழகிய வரிகள்:

**"தங்கம்மா உன்னுடைய**
**சட்டை பிய்ந்து போனதென்ன?**
**அங்கோர் கொடு நகத்தின்**
**அடையாளம் தெரிவதென்ன?"**

### 4. எஸ். அரசரெத்தினம் அவர்கள்.

தானும் வளமாக வாழ்ந்து, பிறரையும் வளமாக வாழ வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட நல்லதோர் எழுத்தாளர். அரசியல் ஆய்வாளர்.

வாழ்வின் பெரும் பகுதியை கொடிய யுத்தம் ஆக்கிரமித்துக் கொண்டது நம் எல்லோருக்கும் வேதனைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 இல் வெளியான அவரது 'சாம்பல் பறவைகள்' குறு நாவலிலிருந்து :

**"இரண்டு மாத கால அகதி வாழ்க்கை முகாம்களிலேயே அழிந்துவிட்ட நிலையில் மக்கள் பலரும் இந்த அவல வாழ்விற்கு முடிவு வராதா என அங்கலாய்க்கத் தொடங்கினர். கொடிய வெப்பமும், வரட்சியான காற்றும் அவர்களை உயிருடன் வாட்டி வதைத்தது. தண்ணீரப் பஞ்சம் தலைவிரித்தாடியதால் ஒழுங்காக உடைகளைத் தோய்த்து அவர்களால் குளிக்கவும் முடியவில்லை."**

என் கவிதைகளை வெகுவாகப் பாராட்டியவர். நன்றாக இல்லை என்றால் சிறு சிரிப்பு மட்டும் வெளிப்படும். குறை கூறமாட்டார். புத்திமதி கூறுவார். பல ஆண்டுகளாக எனக்கு உயர் அதிகாரியாகவும் மற்றும் முகாமையாளராகவும் இருந்தவர். அவரது எழுத்தை என்றும் நான் மதிப்பவன்.

**மற்றொருவர். எனது இளமைக் காலந் தொட்டு இன்றுவரை நண்பராக இருக்கும் எம். எம். அபுல் கலாம் அவர்கள்.**

கலைஞர்களைப் பேட்டிகண்டும், கட்டுரைகளை எழுதியும் "வெண்ணிலா" இதழுக்கு அழகு சேர்த்தவர், தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசித்துவரும், சட்டத்தரணி எம். எம். அபுல் கலாம் அவர்கள் என்பதை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு இங்கு கட்டாயமானதாகும்.

குறிப்பாக கவிதைகள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவை; ஆனாலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படக் கூடியவை; விலை போகவும் கூடாதவை.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல.

இந்நூல் என் இலக்கிய உறவுகளுக்கானது.

நன்றி.

மருதமுனை எஸ். ஏ. ஹப்பார்.

10.04.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2004 தொடக்கம் 2006 வரை வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு. (தொகுதி-1)**

**நன்றி:**

தினகரன்
நவமணி வாரமலர்
தினமுரசு வாரமலர்
அல்-மருதமுனை
சமாதானம்

திண்ணை இணைய சஞ்சிகை
வார்ப்பு இணைய சஞ்சிகை

புதிய படிப்பு வட்டம்
புதுப் புனைவு இலக்கிய வட்டம்

இந் நூலினை வெளிக் கொணர்வதற்கு ஊக்கமளித்த நட்புகளுக்கு...

குறிப்பாக,
சிரேஸ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம்
**பி. எம். எம். ஏ. காதர்**
அவர்களுக்கும்

நண்பர் கவிஞர்
**ஏ. ஜீ. றபியுத்தீன் ஆசிரியர் (டீன் கபூர்)**
அவர்களுக்கும்
முதற்கண் நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


- என்னுள் நீ ...................... 01
- என் காதல் நீதான் ...................... 04
- வேண்டாம் யுத்தம் ...................... 06
- நிலவு அவள் ...................... 08
- ஸஹர் உணவு ...................... 11
- மழை ...................... 13
- நவீன ஆசான்கள் ...................... 15
- மூங்கில் நினைவு ...................... 17
- சட்டைப் பைக்குள் சங்கிலி ...................... 18
- மீண்டுமொரு சந்தர்ப்பம் ...................... 19
- காதல் திருட்டு ...................... 21
- வேண்டும் சுனாமி ...................... 23
- உருமாறும் உறவுகள் ...................... 25
- மண் மணம் ...................... 27
- கனவுகளும் சுனாமியாய்! ...................... 29
- கல்லாய்ச் சமைந்து ...................... 31
- நம்பிக்கை ...................... 33
- சுனாமி நல்ல தருணம் ...................... 35
- மனத்தாபம் ...................... 37
- வாழ்க்கை ...................... 38
- மனக் கிலேசம் ...................... 40
- சரிபாதி ...................... 42
- சீதனம் கேட்காத மாப்பிள்ளை ...................... 43
- தனிமை ...................... 45
- எமது தேசம் ...................... 47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள் நீ...

என்னுள் நீ ஆகிவிட்டாய்
உன்னுள் நான் ஆகுமுன்னே!

அழகில்லை நீ என்றார்கள்
அறிவும் உனக்கில்லை என்றார்கள்.
அடங்காப் பிடாரி நீ
ஆகாது குடும்பத்திற் கென்றார்கள்.

ஆனாலும் என்னுள் நீ
ஆகிவிட்டாய் அறியாப் பருவத்திலே!

கள்ளம் என்றனர் உன்னன்பு
கபடம் என்றனர் உன்காதல்.
வஞ்சகி என்றனர் உன்னை
வாழ்வுக்காகா நீ சூத்திரக்காரி என்றனர்.

ஆனாலும் என்னுள் நீ
ஆகிவிட்டாய் தெரியாப் பருவத்திலே!

என்னுள் நீயாக
உன்னுள் நானாக
என்மடியில் நீயாக
உன்மடியில் நானாக

நீ நானாக
நான் நீயாக....... ஜீரணிக்கமுடியாத
அந்தக் காதல் நிஜங்கள்
அற்றுப் போகவில்லை
இன்னும் என் மனதைவிட்டு.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் என்னுள் நீ
ஆகிவிட்டாய் என்றோ!

நாளை நீ மணப்பெண்ணென்று
நாசுக்காய் கூறியபோது -
நான் நானாக இல்லாமை உணர்ந்தும்
நடைப் பிணமாகவில்லை.

அன்றும் நீ என்னுள்
ஆகிவிட்டவள் என்பதனால்!

நாட்கள் வாரங்களாகி
வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடங்களாகி
இருபது வருடங்கள் சென்றும்,

இன்றும் என்னுள் நீ
ஆகிவிட்டவள் தான்!

காரும் பங்களாவும்
காசும் பணமும்
கசந்து போய்
இத்தனை வருடங்களின்பின்
உன்னுள் என்னை
உள்வாங்க நினைக்கிறாயே!
இது என்ன விந்தை!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கல் என்பது
வெளித்தள்ளல் போல்
அவ்வளவு லேசுப்பட்டதல்ல -
காதலைப் பொறுத்தவரை.

நானும் இன்று ஓர் இதயத்தின்
உள்வாங்கல்தான் -
என் செல்வங்களின்
உயிர்நாடிதான்.

ஆனாலும் என்னுள் நீ ஆகிவிட்டவள்
என்பதனால் உன்னில் ஒரு பரிதாபம்.

என்னுள் ஆகிவிட்ட
உன்காதலின் வெளித்தள்ளல்கள்
என் மரணத்தின்பின்
உன்னுள் உள்வாங்கப்படும்!

அப்போது நான்
ஆகியிருப்பேன் உன்னுள்!!

●

29-08-2004 'நிலாக் கவியரங்கு'
- புதிய படிப்பு வட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் காதல் நீதான்...

பள்ளி வகுப்பறை முன் பந்தியிலே
கள்ளிபோல் என் பக்கம் வந்தமர்ந்து
விரல் நுனிகொண்டு புறங்கால் வருடி
விழிபிதுங்கும் என்னை வேடிக்கை பார்ப்பாள்.

விட்டென்று விலகி விரல்படா தூரம்தாண்டி
விந்தையாய் அவள் விழிகளை நோக்கின்
விஷமத்தனம் செய்யும் சிறு பிள்ளையாய்
விழியுருட்டி வேடிக்கை காட்டிடுவாள்.

பள்ளி விட்டு வெளியில் வரும்போதும்
தள்ளி நின்று கை அசைத்து
தந்திரங்கள் பல செய்து சுமை
தாங்கவொனா என் இதயத்தைத் தாக்கிடுவாள்.

கடைத் தெருவினிலும் கல்யாண வீட்டினிலும்
கல்லூரி விழாக்களிலும் களியாட்ட நிகழ்ச்சியிலும்
தன் இடக்கண் மடித்து இமையுயர்த்தி
என் இதயம் ஒருகணம் நிறுத்திவைப்பாள்.

வெலவெலத்து சுற்றும் முற்றும் பார்ப்பேன்
வெள்ளரிப் பழம்போல் அவள்முகம் தோன்றும்
வெட்கித் தலைகுனிந்து - அவளல்ல நான்தான்
வெயர்ப்புத் தோன்றி விரல்களைப் பிசைவேன்.

கல்லூரிப் படிக்கட்டின் முடி நிலைக்
கட்டொன்றில் கால்தடுக்கி எனை விழவைத்து
கட்டிக்கப் போறவள் கைபிடித்துக் காப்பாற்றினாற்
களங்கம் வந்திடுமோ உன் கற்புக்கென்றாள்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையும் செய்த அவள் ஏனென்னை
இச்சையின்றி வெருவலர் போல் வெருட்டுகிறாள்?
பூனையாய் இருந்த என்னைப் புலியாக்கிவிட்டு
பூச்சிகாட்டுகிறாளா பூட்கை இன்றி!

எட்டி உதைத்து எச்சில் உமிழ்ந்து
ஏளனப்படுத்தி என்மீது எரிகணை வீசிடினும்
அடித்து இழுத்து ஆலமரத்தில் ஏற்றி
அங்கிருந்து தள்ளிவிட்டு ஆனந்தப் பட்டாலும்,

மூக்குடைந்து முன் பல் குத்தி
நாக்குடன் உதடு கிழிந்து உதிரம்
கொப்பளித்து உள் மூச்சு வாங்கிடினும்
என் காதல் நீதான் என்றுரைப்பேன்.

இப்போதே வந்துவிடு இல்லையேல் நானுன்னை
ஈசனுக்கு இன்றே இரையாக்கி விடுவேன்
இன்னொருவன் என் போல் இனிமேலும்
இறு நிலை கொள்ளாமல் இருப்பதற்கு.

●
28-11-2004 தினகரன் மானஸி நிறுவனம் இணைந்து நடாத்திய முத்திரைக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் யுத்தம்...

வேகத்தைக் குறைத்து
வீதித்தடை தாண்டி
வலதுபக்கம் திரும்பிப்பார்க்கிறேன்
வெறிச்சோடிக் கிடக்கிறது 'செக்பொயின்ட்'.

செக்குமாடுகள் போல்
சுற்றிச் சுற்றிவந்த
ஒருவரையும் காணவில்லை - அந்த
ஒரு கருப்பு நாயையும்தான்.

நான் தினமும் வேலைக்குச்செல்லும்
நன்கு பரிச்சயமான பாதைதான்.
பலமுறை வானை நிறுத்திவிட்டு
பல்லிழித்து அடையாளம் காட்டி,

அனுமதி கிடைத்ததும்
அடிதடுமாறி தப்பிப்பிழைத்தோ மென
மீண்டும் வாகனத்தில் ஏறி
மறைந்ததும் இங்குதான்.

தாய் தந்தை தாரம்
தம்பி தங்கை அண்ணா
மாமன் மாமி மச்சான்
மதினி மக்கள் உறவுகளெல்லாம்,

நலிந்து நடைப்பிணமாகி
நாறிவிட்ட நிலையில்
நடை பயின்று
நல்லபல பண்புகளுடன்

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண் டெழுவதைக்
காணும் போது,

வேண்டாம் வேண்டாம்
மீண்டுமொரு யுத்தம்
எம் ஈழத்திருநாட்டில்
இனி மேலும்!

●

27-08-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவு அவள்

அங்கேபார் முழுமதியை
அதைப்பிடித்து நான்தருவேன்
அன்பேயழகே நீ
அமுதுண்ணு ஆரமுதே!
அன்னையின் அரவணைப்பில்
அமுதுண்ணும் பிஞ்சும்
அண்ணார்ந்து பார்ப்பது
அந்த நிலவைத்தான்.

பள்ளி நாட்களையும்
பாட வேளையையும்
விளையாட்டாய்ப் போக்கிவிட்டு
விதிதான் இதுவென்று
அங்கலாய்த்து ஆர்ப்பரித்து
ஆரவாரப்படும் மாணவனும்
கடற்கரை மண்ணிலே
கலங்குவது அந்நிலவிடம்தான்.

கடன்தொல்லை தாங்காது
கடற்பரப்பில் குப்புறப்படுத்து
பெருமூச்சுவிடும்
பெருந் தகைக்கும்
நிமிர்ந்து பார்க்கும்போது
நிலவுதான் தஞ்சம்.

புத்தக நடுப்பக்கத்தில்
புதைத்து வைத்த
புத்தம்புதிய சிகரட்டை
பற்றவைத்து பரவசப்பட்டு

▸▸

புகையினை உள்ளிழுத்து
பூமிக்கு எதிர்த்திசையில்
பூக்களாய் ஊதும்போதும்
புன்னகைப்பது அந்நிலவுதான்.

அதோபார் முழுமதியென
அவளை நிமிரவைத்து
அதிர்ச்சி முத்தமொன்று
அதிரடியாய் காதலுக்களித்து
ஆனந்தப்படும் காதலனுக்கும்
அன்புச்சாட்சி அந்நிலவுதான்.

காதலிலே தோல்வியுற்று
கதி கலங்கி
நீலவானின் நிலாவொளியில்
நீள் போத்தலொன்றை
இடுப்பிலிருந்து இதமாக
இழுத்தெடுத்து போதையின்பங்காணும்
இளைஞனையும் இனிவேண்டாமென
எச்சரிக்கை செய்வதும்
எம் நிலவுப்பெண்தான்.

நீதிமன்று நீவந்து
நீதானவள் காதலென்று
நீள்விரல் காட்டி
நீதி பகர்ந்துவிட
நிலத்திற்கு அழைப்பதும்
நிலா உனைத்தான்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பயணத்தின்
நிழல்களாக வந்துநிற்கும்
நிம்மதி இல்லா
நித்திரையற்ற இரவுகளை

தவிர்த்துவிட எண்ணி
தள்ளாடும் வயதினிலும்
தரையமரும் தாத்தாக்களுக்கும்
தஞ்சம் அந்நிலவுதான்.

பூரண கண்விழிக்கும்போது
பூமி விழித்துக்கொள்வதுபோல்
கண்ணிமை பதிக்கும்போது
காதலர்கள் விழித்துக்கொள்வதேன்?

காதலர்களுக்கும் உன்மேல்
கட்டுக்கடங்கா காதல்போல்.

●
ஒக்டோபர் - டிசம்பர் 2005.
- அல்-மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸஹர் உணவு

அதிகாலை நாலுமணியிருக்கும்
அங்கும் இங்கும்
அழகழகாய்ப் பரப்பிக்கிடக்கும்
அமுதுவகை மேசையிலே.

ஒரு பிடிபிடித்து
ஓரக்கண் நிமிர்ந்து பார்ப்பர்
ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரத்தை.
நேரம் இருப்பின்
நெடிய வாழைப்பழங்கள்
நாலு உட்சென்றுவிடும்
நாழிகை ஆகுமுன்னே.

அதற்கும் மேலே
அரையவியல் முட்டையொன்று.
அதைக் கீழிறக்க
அப்பிள்ஜூஸ் வேறு
ஆஹா! இதுவல்லவோ ஸஹர் உணவு.

விழித்துப் பார்ப்பர்
விழி பிதுங்கும் -
விடிந்துவிட்ட சங்கதிகேட்டு
வீணானது நோன்பொன்றுதான்.

⏩⏩⏩

அலறி அடித்துக்கொண்டு
அண்ணார்ந்து பார்ப்பாள்
சுவரில் தொங்கும்
சுவர்க் கடிகாரத்தை - அது
சுட்டும் நாலரைமணிதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிற் படுக்கும் கணவன்
அவனருகில் அன்புச் செல்வங்கள்
அவசர அவசரமாய் அவர்களையெழுப்பி
அன்புமொழி பேசி அமுதூட்டி
ஆனந்தமாய் ஸஹர் உண்பாள்.

அதான் கேட்டதும்
அவள் சென்றிடுவாள் தொழுகைக்கு
அவர்களையும் பள்ளிக்கு
அனுப்பி விட்டு.

▸▸ ▸▸ ▸▸

அரட்டி விடுவதற்கோ
அண்ணார்ந்து பார்ப்பதற்கோ
இங்கு கடிகாரம் ஒன்றுமில்லை,
இவர்களுக்குப் பிள்ளைகளுமில்லை.
தள்ளாத வயதில்
தயவு அல்லாஹ்தான்.

அகப்பட்டதை அகப்பையில்
அள்ளி எடுத்துண்டு
அல்ஹம்துலில்லாஹ் எனக்கூறி
ஆவலாய்க் காத்திருப்பர்
அதான் கூறும்வரை - சிலவேளை
அதான் கூறியுமிருக்கும்.

●

05-11-2004 ‘இப்தாரும் கவியரங்கும்’
- புதுப்புனைவு இலக்கிய வட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

மழையின் முதற்துளி
மண்ணில் விழுமுன்
முதற்சென்று நிற்பாளென்
மூத்த மகள்.

காலில் செருப்பிருக்காது
கையில் குடையிருக்காது
தலையில் தொப்பியிருக்காது
தரையில் காலுமிருக்காது.

மழைதான் அவளுக்கு நண்பன்
மழைதான் அவளுக்கு உணவு
மழைதான் அவளுக்கு உறக்கம்
மழைதான் அவளுக்கு எல்லாம்.

தொப்பாகி நிற்பாள்
தோணிவிட தொடர்மழையில்
மிஞ்சாது அந்நாளில்
மின்சாரப் பட்டியலும்
தொலைந்து விடும்
தொலைபேசிப் பட்டியலும்.

புத்தகத்தின் நடுப்பக்க மெல்லாம்
புதிய மழைக்குச் சொந்தம்
கதிகலங்கி நிற்பாள் என்மனைவி
கட்டுப்பாடு பெண்ணுக்கு வேண்டுமென்று.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிள்ளைப்பருவம் எண்ணிப்பார்ப்பேன்
பின் நானும் நின்றுரசிப்பேன்
பிள்ளை வளர்க்கத் தெரியாதென்பாள்
பின் அவளும் வந்துரசிப்பாள்.

எண்ணிப் பார்த்தது
நான் மட்டுமல்ல - என் மனைவியும் தான்.

●
02-07-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன ஆசான்கள்

வகுப்பிலொரு ஆசான்
வரும் பதவியுயர்ப்
பரீட்சைக்காய் விழுந்தடித்துப்
படிக்கின்றார் பாலகர்முன்.

இன்னுமொரு ஆசான்
இன்சிரியூட் பாடங்களை
இதமாய்த் திருத்துகிறார்
இதுவும் வகுப்பறையில்தான்.

சொந்த வேலையென்று
சோலிகளைக் கவனிக்க
சென்றிடுவார் இன்னொருவர்
சோக்குக்கட்டிகளை எறிந்துவிட்டு.

செல்போனைக் கையிலெடுத்து
சேதி அறிந்திடுவார்
'வருகிறேன் இதோ' என்று
பைக்கை முறுக்கிடுவார் வேறொருவர்.

அதிபரும் பிள்ளைகளும்
அமைதியாய் இருப்பதுகண்டு
ஆச்சரியப்படுவர் மற்றைய
ஆசான்கள் ஆத்திரத்துடன்.

ஆத்திரப்படும் ஆசான்கள்
அல்லா ஹ்வுக்குப் பயந்தவர்களாம்
அப்படியும் ஒருகதை
அங்கு உலவுகிறது
▸▸.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் பள்ளிவிட்ட
பின் படிப்பும் (ரியூஷன் கல்வி)
அதிபரின் 'சைட்' வருமானமும்
அந்த ஆசான்களின் கையில்தானாம்.

●
22-05-2005 - நவமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூங்கில் நினைவு

முட்கம்பி தாண்டி
மூங்கில் மரம்தறித்து
முழுசாய் முடிவதற்குள்
முதுகில் மூங்கிலடி.

வாரிச் சுருட்டி
வேலி பாய்ந்து
வீடு வந்தபோது
விழுந்த அடிகள்
மூங்கில் தாகினை
முழுமை பெறச்செய்தன.

முந்தநாள் மூத்தமகன்
மூங்கில் வேண்டுமென்று
முகத்தைப் பார்த்தபோது
முதுகைத் தடவிக்கொண்டேன்.

முப்பது வருடங்களாக
முதுகைத்தான் தடவுகிறேன்
மூங்கில் நினைவுமட்டும்
முதுகைவிட்டு நீங்கவில்லை.

●

26-02-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டைப்பைக்குள் சங்கிலி

பக்கத்து மாணவனின்
பென்சிலைத் திருடி
மூன்றாக்கிச் சட்டைப்பைக்குள்
மறைத்து விட்டேன்.

சட்டைக்குள் என்னவென
சடுதியாய் விசாரணை
'சங்கிலி' என்றேன்
கிலிபிடித்து நின்றநான்.

அன்று அதிபராயிருந்த
என் அப்பாவின்
ஐந்து விரல்களும்
என் கன்னத்தில்.

இன்று சங்கிலியைக் காணும்போதெல்லாம்
என் சட்டைப்பைக்குள் பென்சிலையும்
கன்னத்தில் வடுவினையும் - ஏதோ
எண்ணத்திற் தேடுகிறேன்.

●
24-09-2005 - தினகரன்.

## மீண்டுமொரு சந்தர்ப்பம்

இருளின் பிடியின்
இறுக்கத்தைத் தளர்த்தி
கதிரவன் மெல்லமெல்ல
கண்திறந்து பார்க்கிறான்.

உலகம் இன்னும்
உறங்கிக் கிடக்கிறது,
பறவைகளும் மிருகங்களும்
புல்-பூண்டுகளும் தவிர.

பூச்சிகளும் தாவரங்களும்கூட
புத்துயிர்பெற்று - தங்களை
உயிர்ப்பித்துக் கொண்டு
உற்சாகமாய் உறக்கம்கலைத்தன.

மெல்ல மெல்ல
வெளிச்சத்தைப் பரப்பி
உலகம் முழுவதையும்
ஆக்கிரமித்துக்கொண்டான் கதிரவன்.

மாற்றமில்லை மாற்றமேயில்லை
மனிதரில்மட்டும் மாற்றமில்லை
கொலை பொய்-களவு
கள்ளருந்தல் குருநிந்தை.

பஞ்சமா பாதகங்கள்
பரவிக் கிடக்கும்
உலகைத்தான் காண்கிறான்
உச்சிக்குயர்ந்துவிட்ட கதிரவன்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கித் தலைகுனிந்து
விழிதாழ்த்தி மீண்டும்
சிறை கொள்கிறான்
சினங்கொண்ட இருளின்பிடிக்குள்.

நாளையொரு சந்தர்ப்பம்
காலை வருமென்று
மாலைச் சூரியன் - தன்
வாலைச் சுருட்டிக் கொண்டான்.

●
06-08-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் திருட்டு

அவளைத் தொலைத்துவிட்டு
அகிலமெலாம் தேடுகிறேன்.

ஆசையாய்த் துடைத்து
அன்பு முத்தமிட்டு
அழகாய் வைத்திருந்தேன்
அரைக்கைச் சட்டைக்குள்.

அலுவலக உபயோகத்திற்காய்
அவ்வப்போது பதிவுசெய்த
ஆயிரம் இலக்கங்கள் - அவளை
ஆக்கிரமிப்புச் செய்தன.

நிஜக் காதலியின்
நித்திரைச் செய்தியெல்லாம்
அவளுள்தான் அமைதியாய்
அடங்கிக் கிடந்தன.

மகாபொலவில் புது
மணத் தம்பதிகள்
கைகோர்த்துச் சென்றதையும்
கிளிக்செய்து வைத்திருந்தேன்.

செல்லிடம் என்பதால்
சென்றுவிட்டாயோ என்னிடம்
சொல்லிக் கொள்ளாமல்
செருக்குடன் நீ!

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்துவிட்டுத் தேடுகிறேன்
தொலைபேசிக் காதலியை
தெரிந்தவர்கள் தயவுடன்
திருப்பித் தந்திடுங்கள்.

காதலைத் திருடுவது - உங்களுக்குக்
களங்கமெனத் தெரியாதா?

●

29-10-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும் சுனாமி!

மூத்த மச்சான்
முகம் தவிர்க்க
முக்காடை இழுத்திழுத்து
முந்தானை முடிச்சாச்சு.

மூன்று குமர் காப்பாற்ற
முழுசாகக் கொட்டில் வேண்டும் - இல்லையெனில்
மாண்டுவிட மீண்டு மொரு
மா சுனாமி வரவேண்டும்.

▸▸ ▸▸ ▸▸

முதல்வீட்டு மூலையெல்லாம்
மூட்டைகளைக் காணவில்லை!
ஓட்டைவீடு ஓடிசலென
ஒப்பாரி வைக்கின்றார்.

சேவகரின் கவலையெல்லாம்
சேர்த்துவைக்க இடமில்லை.

அடுத்துஒரு சுனாமிவந்தால்
அனைத்தையுமே அமுக்கிடலாம்
அனுபவமும் உள்ளதனால்
அமர்க்களமாய்ச் செய்திடுவார்.

▸▸ ▸▸ ▸▸

மூத்த பிள்ளை பிரச்சனைகள்
முழுசாக முடிந்தது போல்
அடுத்த வளுக்கும் நகரத்தில்
அடுக்குமாடி வாங்கிடலாம்.

அழகான சுனாமி யொன்று
அவசரமாய் வந்து விட்டால்
அதிகாரி கவலை யெல்லாம்
அடியோடு பறந்துவிடும்.

மொத்தத்தில் எங்களுக்கு
மீண்டுமொரு சுனாமி
மிகவிரைவில் வரவேண்டும்
மிச்சசொச்சம் நிரப்பிடவே.

●

26-11-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறும் உறவுகள்

காலம் தன் கோலங்களைக்
காட்சிப் பொருட்களாய்க் கண்முன்னே
காட்டிச் செல்லும் போதெல்லாம்
கலங்கிக் கொள்ளும் என்கண்கள்.

தந்தையின் இழப்பு
தாயின் இயலாமை!
தங்கையின் எதிர்காலம்
தம்பியின் மேற்படிப்பு!!

இப்போது நினைத்தாலும் நடுங்குகிறது
இலேசாக என் இதையம்
இத்தனை தடைகளையும் தாண்டி
இமயம்போல் நிற்பதை யெண்ணி.

உறவுகளும் ஒரு நாள்
உருமாறு மென நினைத்ததுண்டு - ஆனால்
சொந்தங்களே உருமாறி எங்கள்
பந்தங்களை அழிக்குமென நினைத்ததில்லை.

மாமா மச்சான் என
மயக்கும் சொந்தங்களைக் காட்டி
மங்கை யெனும் மதுவூட்டி
மதிமயங்கச் செய்துவிட்டனர் ஒருறவை.

இளங் கன்றும் பயமறியாது
இடித்து விட்டது இதயமதில்
அடிதாங்கிப் பழகிப்போன இதயம்
இடிதாங்கச் சிறிது சிரமப்பட்டது.
▸▸

புரண்டு புரண்டு படுத்தநான்
வரண்டு போன நாவினை
ஈரமாக்க எண்ணி இதமாக
இரண்டு மிட்டாய்களை உட்கொள்கிறேன்.

இதயமும் நசுங்கி உள்ளேயிருந்து
உதிரத்தை வெளியேற்றுவதுபோல் ஓருணர்வு
உணர்ச்சியற்ற நாவினை மெதுவாக
உரசிப்பார்க்கிறேன் விரல் நுனிகளால்.

நா இரத்தம் கசிந்ததுபோல்
நாலா பக்கமும் பரவிக்கிடக்கிறது
இதயத்தின் உதிரமா மிட்டாய்களின்
கசிவா எனத் தெரியவில்லை!

●

25-11-2005 - திண்ணை இணைய இதழ்.
மறு பிரசுரம் - தினமுரசு வார இதழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் மணம்

கல்லும் மண்ணும்
மறுபிறவி யெடுத்து
சுயவடிவம் பெற்றதுபோல்
ஓரமாய் ஒதுங்கிக்கிடக்கிறது.

எங்கள் வீடுகளெல்லாம்
வீதிக்கு வந்து
மாதங்கள் பலவாகிவிட்டன
வீதியாய்மாறிவிட்ட பல
வீடுகளும் உண்டு.

தரை கரையெல்லாம் வெறிச்சோடிக்
கவனிப் பாரற்றுக் கிடக்கிறது
அலைகள் மட்டும்
மீண்டும் மீண்டும்
சீண்டிப் பார்க்கிறது
கரையை நக்கி நக்கி.

ஆயிரம் ஆயிரம் உயிர்களை
அப்படியே ஏப்பமிட்டும்
அமைதியாய் அடங்கிக் கிடப்பது
அந்த ஆழி மட்டும்தான்.

மெல்ல மெல்ல அடியெடுத்து
மணற்பரப்பை நோக்கி நகர்கிறேன்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனை - மண்ணின் வாசனை
வாரி நெஞ்சில் தடவிக்கொள்கிறேன்
இன்னும் மாறவில்லை
இந்த மண்ணின் வாசனை மட்டும்.

●
17-12-2005 - தினகரன்.

## கனவுகளும் சுனாமியாய்!

இந்தோ அவுஸ்திரேலிய
இயூரேஷியத் தகடுகள்
திடீரென விலகித்
திறந்து கொள்கின்றன.

கடல் பிளந்து
காங்கை வெளிப்பட்டு
சரேலென மேலெழுகிறது
சுமுத்திராவுக்குத் தெற்கே!
பிடாங் மற்றும் பெங்ரே
பிடரி முறிந்து கிடக்கிறது.

பூனைபோல் பதுங்கி வந்து
புலிபோல் பாய்கிறது புதியதோர் சுனாமி.
பாயுடன் தூக்கியெறியப்பட்டு
பள்ளத்தில் கிடக்கிறேன்.
இறக்குமுன் பார்க்கிறேன்
பிறந்தமேனியை ஒருமுறை.

எங்கும் நீர் எங்கும் நிலம்
எங்கும் நிசப்தம் எங்கும் பிரளயம்
என்வீடு என்மனைவி என்மக்கள்
எல்லாம் கடலிற் கலக்கின்றன.

கடிகாரஒலி டிக்டிக் எனக்கேட்கிறது
கனவுகள் மீண்டும் கலைகின்றன!
கலண்டரைக் கவனித்துப் பார்க்கிறேன்
காலம் டிசம்பர் இருபத்தாறைக் காட்டுகிறது.

▸▸

வருடம் ஒன்றாகியும்
இருட்டுக் கொட்டிலுக்குள்
கனவுகளாய் மிரட்டி
நினைவூட்ட அவ்வப்போது
வந்துபோவ தெலாம்
அந்தச் சுனாமிதான்.

●
24-12-2005 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லாய்ச் சமைந்து...

வாசல் தோறும் உன்வரவை
எதிர்பார்த்துக் காத்து நிற்பேன்
யாசகம் என்றெண்ணி எட்டிநிற்பாய்.

அண்ணன் வருகை கண்டு
அண்ணார்ந்து பார்க்கும் நீ
அந்நியமாய் எனைக் காட்டிக்கொள்வாய்.

மழையென்று மரத்தடி ஒதுங்கி
தளையொன்றை உசுப்பி விட
ஏளனமாய் எனைப் பார்ப்பாய்.

கடலை வண்டிக் காரனிடமும்
கச்சான் விற்கும் சிறுவனிடமும்
கண்ணசைத்து ஜாடை காட்டிடுவாய்.

உனை ஆவலாய் முத்தமிட
நெருங்கும் போதெல்லாம் நீயென்னை
அரைவேக்காடு அசிங்கம் என்பாய்.

ஆசையாய் உன் கரம்பிடித்து
அன்பு மொழி பேசி
அழகழகாய் ஐந்தாறு பெற்றெடுத்து
அரசாள எண்ணி யிருந்தேன்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமிப் பேயலை வில்லனாய்மாறி
உனை சுருட்டிச் சென்றபோது
கல்லாய்ச் சமைந்து நின்றேன்
எல்லாக் காலமும் போல்.

●

18-02-2006 - தினகரன்.

## நம்பிக்கை

என் பெற்றோரை மட்டும்
என் கண்களுக்குக் காட்டிவிடாதே!

சுனாமிச் சுருள் அலைகளுக்குள்
சிக்குண்டு சிறையுண்டு மாண்ட
என் பெற்றோரை மட்டும்
என் கண்களுக்குக் காட்டிவிடாதே!!

டெனிம் காற் சட்டையும்
ரீசேட்டும் இன்று எனக்கில்லை
என் பிய்ந்த சட்டையையும்
என் கிழிந்த சாறனையும்
என் வாப்பா கண்டால்
உயிர் நீத்திடுவார் என்முன்னே.

என் ஒட்டிய வயிற்றையும்
என் உப்பிய வதனத்தையும்
என் உம்மா கண்டால்
கண்முன்னே கதறி அழுதிடுவாள்
நானும் சேர்ந் தழுவதற்கு
என்விழிகளுக்குச் சொந்த நீருமில்லை.

கட்டிய வீடும் காரும்
பெட்டியில் துண்டுதுண்டாய்
ஏற்றிச் சென்று கொட்டிய காட்சிகள்
என் மனதில் மட்டும்
மாறாப் பதிவுகளாய் இருக்கட்டும்.

நாளை ஒரு காலம்வரும்
நானும் வீடுகட்டிக்
குடியிருப்பேன் இன்று என் வீடு
வீதியாய் விரிந்து கிடந்தாலும்.

●
04-03-2006 - தினகரன்.

## சுனாமி - நல்ல தருணம்

அழகிய அக்பர் கிராமம்
அன்பான மௌலானா வீட்டுத்திட்டம்
இன்னொரு இருபத்தைந்து மீனவர்திட்டம்
இன்றைய மக்பூலியாபுரம் (அன்றைய பஞ்சாப்) என

ஆண்டாண்டுகாலமாக எங்கள் முதியோர்
ஆதியில் தடம் பதித்த
சுவடுகளையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில்
சுருட்டி எறிந்து விட்டாய்.

பணம் நகை பாத்திரங்கள்
பத்திரப் படுத்திய ஆவணங்கள்
வீடுவாசல் எதுவும் வேண்டாமென
வீதிக்கு ஓடிவந்த எம்மக்களை,

உடுத்த உடைகள் கூட
உடலில் காக்க விடாமல்
உக்கிரமாய்ப் பிய்த் தெடுத்து
உள்வாங்கிக் கொண்டாய் நீ!

பிறக்கப் போகும் பிள்ளையையோ
இறக்கப் போகும் தறுவாயையோ
கண்டுகொள்ளாமல் குருவிக் கூட்டுக்குள்
குண்டு வைத்ததுபோல் ஆக்கிவிட்டாய்!

ஆக்குவதும் அழிப்பதும் நீதான்
அவனியிலே அதற்கு இணையில்லை
எனவுணர்த்தவா ஆழிப்படைகளை அனுப்பி
அரைமணிக்குள் ஆக்கிரமித்து விட்டாய்!

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயம் கடல் தரையென
அதி நவீன ஆயுதங்கள்
அதிலும் உயர் தொழிநுட்பம்
அத்தனையும் இருந்தென்ன பயன்?

கடல் ஆகாயம் தரைகளையே
படைகளாக்கி ஆட்டங் காணவைப்பேன்
என நீ உணர்த்திவிட்டாய் -
அகிலத்தை நடுநடுங்க வைத்துவிட்டாய்!

கடலில் கால் பதித்து
அலைகளை அள்ளி முத்தமிட்டு
அணைத்து புரண்டு விளையாடி
ஆனந்தப் பட்ட நாங்கள்,

அலை என்றதும் அலறி அடித்துக்கொண்டு
ஏறுதற்கு இடம் தேடுவதையும்
ஓடுதற்கு வழி பார்ப்பதையும்
வேடிக்கை பார்ப்பதற்கா எங்களுயிர் காத்தாய்?

இல்லையில்லை இது எச்சரிக்கை மட்டும்தான்
இன்னும் உன் தண்டனை இறங்கவில்லை!
இரவு பகலாகவும் பகல் இரவாகவும்
சூரியன் மேற்கிலும் விழிகள் உச்சியிலும்,

மாறும் நாள் வருவதற்குள் எங்களை
மாற்றிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம்
இது ஒரு நல்ல தருணமும்கூட
உன்னை நன்கு புரிந்து கொள்வதற்கு.

● 21-10-2006 - வார்ப்பு இணைய இதழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனத்தாபம்

தொடைகளுக்குள் நிரந்தரமாய்த்
தொலைந்துவிட்டது போல்
முடக்கப்பட்ட அவனது
முழங்கால்களிரண்டும் தோன்றும்.

வலதுகைவிரல் மடிப்புகளால்
வாரப்படாது கோதிவிடப்பட்ட
முடிகளின் ஒருபகுதி - மாதர்
முக்காடிட்டதுபோல் தோன்றும்.

நுளம்புத் தொல்லை என்று
நூற்ற விளக்கை உயிர்ப்பித்து
நிமிர்ந்து கையில் அகப்பட்ட
நாசினியை விசிறும் போதும்,

பன்னிரண்டு மணிக்கு மேல்
பக்கத்தில்வந்து படுக்கும் போதும்
முழங்கால்களும் வலது கையும்
முடிகளின் ஒரு பகுதியும்,

அப்படித்தான் தோன்றும்!

அன்றுமவன் அப்படித்தான் படுத்திருந்தான்
அவனது ஒருகாலைத் தொலைத்துவிட்டு!
தொடைகளுக்குள் அல்ல
தொங்கிக் கொண்டிருக்கும் சங்கிலிக்குள்!!

●

02-09-2006 - தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

ஒற்றைக் கம்பியில்
ஒருக்கணித் தமர்ந்து
ஓரக்கண்ணால் காணும்
ஓராயிரம் காட்சிகள்.

நீண்ட தொலைவில்
நீள் பனையொன்று - அதன்
நிழல் வழியே
நிம்மதியாய் இருநாய்கள்.

ஆகாய உச்சியெட்ட
ஆலாக்கள் இரண்டு
அதன் பின்னே
அழகிய கிளிகள்பல.

வயலில் வயதான
விவசாயிகள் பலர்
வடிவாய்ச் செப்பனிட
வடிச்சலுக்காய் வாய்க்கால்களை.

சக்கரச் சவட்டுதலில்
சில புழுக்கள் - அதைக்
கொத்தித் தின்ன
கொக்குகள் பல.

வீதியால் வந்தவனை
வேருடன் பிடுங்கி
வயலில் விட்டெறிந்த
விபத்து ஒன்று.

▸▸

பஸ் மிதிப்பலகையில்
பயணம்செய்த இளைஞன்
பரிதாபமாய் விழுந்ததை
பார்த்துச்சிரிக்கும் இளசுகள்.

வலதுகையை உரசிக்கொண்டு
விரைவாய்ச் செல்லும்
பாதுகாப்பு வாகனமொன்று
பாதசாரிக்கு பாதுகாப்பின்றி.

அழகழகாய் அணிவகுத்து
அவசரமாய் பறந்துவந்த
வாகனங்கள் அனைத்தும்
வந்த அரசியல்வாதிக்காய்.

இத்தனையும் பார்த்துரசித்த
இளைய காக்கை
மற்றக்காலை உயர்த்தியபோது
மரணம் மின்கம்பியில்.

●
19-08-2006 தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக் கிலேசம்

நித்திரையில் நான்
நாலுமுறை எழுந்திருப்பேன்.

பல்துலக்கிக் குளித்திட
பலமணி நேரம்
தலை துவட்ட
தலை முழுகிப் போகும்.

காலையுணவு ருசிக்காது
காலை வாரிவிடும்.
இஸ்திரிகை செய்யாஆடை
இன்றுமட்டும் என்றுசொல்லும்.

சைக்கிள் சாவியைத்தேடி
சலிப்புத் தட்டிவிடும்.
கடிகாரத்தைப் பார்த்தால்
கதிகலங்கிவிடும்.

வேகமாகச்சென்று பின்னர்
விழிபிதுங்கி நிற்பேன்.
எரிபொருள் தீர்ந்தது
என்மூளைக் கெட்டாது.

எப்படியோ சமாளித்து
எட்டிப்பிடிப்பேன் கந்தோரை.
வரவுப்பதிவேடு மட்டும்
வரிசையாயுள்ள புத்தகங்கள்மேல்
வலியச்சென் றமர்ந்ததுபோல்
வாவென்று கையசைக்கும்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்புக்கோடு எச்சரிக்கும்
இன்றும்நீ ‘லேட்’தானென்று.

முந்தநாள் சம்பவங்கள்
முழுவதையும் ஏப்பமிட்டதுபோல்
முகாமையாளர் வீற்றிருப்பார்
முகாரி என்மனதில்தான்.

●

06-05-2006 தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரி பாதி

பள்ளி நாட்களில் உன்னை
பாதி என்றுதான் சொல்வோம்
பாணிலும் பாதி கேட்பாய்
பல்லிமிட்டாயிலும் பாதி கேட்பாய்.

அப்பியாசக் கொப்பியிலும் பாதிகேட்பாய்
அழி இறப்பரிலும் சரிபாதிகேட்பாய்
அள்ளியுண்ணும் உணவிலும் நீ
அரைவாசி கேட்பாய் அன்பாக.

பின் அன்பிலும் பாதிகேட்டதனால்
ஆண்டிறுதிப் பரீட்சை தனை
ஆளுக்கு அரைவாசி பூர்த்திசெய்து
ஆசையாய் கரம் பிடித்தோம்.

அழகழகாய் அன்புச் செல்வங்கள்
ஆளுக்கு இரண்டு என
ஆண் இரண்டும் பெண்ணிரண்டும்
அதிசயமாய்ப் பெற் றெடுத்தோம்.

ஆழிப் பேரலை உன்னைமட்டும்
ஆவேசமாய் அள்ளிச் சென்றபோது
கையாலாகா அரை உயிராய்
கதிகலங்கி நின் றிருந்தேன்.

நிவாரணங்கள் நிறையவே வந்தபோது
நிஜமாக உனை நினைத்து
சரியாக பாதிதனை கொடுத்துவிட்டேன்
சண்டாள சனியன்களுக்கு இலஞ்சமாக!

● 27-05-2006 தினகரன்.

# சீதனம் கேட்காத மாப்பிள்ளை

சீதனம் வேண்டாம் எனக்கு
சீர்வரிசையும் வேண்டாம் எனக்கு
சின்னத் தங்கை மணப்பதற்கு
சில இலட்சங்கள் தந்தால்போதும்.

காரொன்றும் தந்திடுங்கள் மாமாவின்
கௌரவத்தைக் கட்டிக் காப்பதற்கு
மாடிமனை கொடுத்திடுங்கள் மாமா
மகளை மற்றவர்கள் மதிப்பதற்கு.

உப்பு டையில் ஊறவைத்த
உவப்பான வண்ணவண்ண சாரங்கள்
உலகை எல்லாம் வலம்வந்த
காலத்தில் சேர்த்த பணம்
பத்திரமாய் கூட்டு வட்டியுடன்
பத்திரத்தில் காத்துக் கிடப்பதையும்,

தங்கச் சுனாமி யொன்று
தரை வழியே வந்தபோது
தந்திரமாய் ஓடிச் சென்று
தட்டிக் கொண்ட சொர்ணங்கள்
பத்திரமாய் பணப் பெட்டியிலே
பாளங்களாய் பதுங்கிக் கிடப்பதையும்,

கண்டு கண்டு கண்பூத்து
கடைசியிலே கண்ணான மாமனிடம்
பெண் கேட்டு வந்துவிட்டேன்
சத்தியமாய் சதமேனும் சீதனமாய்

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரத்தில் எழுத வேண்டாம்
அத்தனையும் கொடுத்திடுங்கள் அருமைமகளுக்கு!

பளார் என்றென் கன்னத்தில்
பாவி மனச்சாட்சி அறைந்ததுவோ!
பக்கென விழித் தெழுந்தேன்
பகலிலும் சீதனக் கனவுதானோ!
சீதனமே இனி வேண்டாம்
சீர் திருந்தி வாழப்போறேன்.

●

23-10-2006 'சமாதானம் - 14' கவிதைப் போட்டி.
முதற் பரிசு பெற்ற கவிதை.



Digitized by Noolaham Foundation

# தனிமை

பூக்களின் மலர்ச்சி
உன் சிரிப்பையும்
தென்றலின் தொடுகை
உன் ஸ்பரிசத்தையும்
மழையின் வருகை
உன் குளிர்ச்சியையும்
வெய்யிலின் தாக்கம்
உன் கோபத்தையும்,

புயற்காற்றின் வேகம்
உன் ஆர்ப்பாட்டத்தையும்
அடிக்கடி ஞாபகப்படுத்துகிறதே!
அப்போதெல்லாம் உன்னை
கோபித்துக்கொள்வேன் பின்
உன் கையாலாகாத்
தன்மையை எண்ணியும்
சற்று ஆறுதலடைவேன்.

நான் ஒன்றும்
தனிமைப்படுத்தப் பட்டவனல்ல
நீ என்னைத்
தனிமைப் படுத்தினாலும்!
என்னுயிர் இவ்வுலகில்
இருக்கும் வரை
இயற்கையும் எனக்குத்
துணையாய் இருக்கும்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமை

பூக்களின் மலர்ச்சி
உன் சிரிப்பையும்
தென்றலின் தொடுகை
உன் ஸ்பரிசத்தையும்
மழையின் வருகை
உன் குளிர்ச்சியையும்
வெய்யிலின் தாக்கம்
உன் கோபத்தையும்,

புயற்காற்றின் வேகம்
உன் ஆர்ப்பாட்டத்தையும்
அடிக்கடி ஞாபகப்படுத்துகிறதே!
அப்போதெல்லாம் உன்னை
கோபித்துக்கொள்வேன் பின்
உன் கையாலாகாத்
தன்மையை எண்ணியும்
சற்று ஆறுதலடைவேன்.

நான் ஒன்றும்
தனிமைப்படுத்தப் பட்டவனல்ல
நீ என்னைத்
தனிமைப் படுத்தினாலும்!
என்னுயிர் இவ்வுலகில்
இருக்கும் வரை
இயற்கையும் எனக்குத்
துணையாய் இருக்கும்.

இருட்டுக்குள் நான் இருந்தாலும்
இன்றும் என்னிதயம் உன்
வெளிச்சத்தைத் தான் தேடுகிறது
வெளிச்சத்துள் இருக்கும் நீயோ
இருட்டடிப்புக் காரியாய் இன்னமும்
என் வெளிச்சத்தைப் போக்குகிறாயே!

●
30-11-2006 'திண்ணை' இணைய இதழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தேசம்

ஏழைகளின் இல்லங்கள்
எரியும் நெருப்பில் - அதில்
ஏனோ குளிர்காய்கிறது
எமது இத்தேசம்.

குழந்தைகளின் கூக்குரலும்
குமர்களின் கூப்பாடும்
முதியோரின் முனகல்களும்
மூப்படைந்த நோவினையும்
கண்டும் கலங்காதது
எமது இத்தேசம்.

இரட்டைக் குழலின்
இடி ஓசையையும்
இரவைப் பகலாக்கும்
இடைவிடா 'செல்'வீச்சையும்
பார்த்தும் கேட்டும்
பயப்படவில்லையே இத்தேசம்.

அகப்பட்ட அங்கங்களின்
அவதிப் படுகையும்
பிசிரிக்கிடக்கும் உடலின்
பிண வாடையும்
பழகிப்போன தொன்றாயிற்று
பாழாய்ப்போன இத்தேசத்திற்கு.

▸▸

இனத்தையினம் சுத்திகரிக்கும்
இழிநிலையும் இங்குதான்
இருப்பிடம் இழந்து
இடம்பெயர்வதும் இங்குதான்.

தவறிப் படுகுழிக்குள்
தாழப் போவதற்குள்
எச்சரிக்கை செய்வது
ஏகனின் கடமையல்லவா?
சுனாமியின் எச்சரிக்கையாவது
சுரணையை ஏற்படுத்தவில்லையே!

இன்றோ நாளையோ
ஆழிக்குள் அடங்கிவிடும்
இத்தேசம் - தேசம்மட்டுமல்ல
இங்கிருக்கும் நாமும்தான்.

●

08-10-2006 - 'இப்தார் நிகழ்வும் கவியரங்கும்'
புதுப்புனைவு இலக்கிய வட்டம்.

**இத் தொகுப்பில் உள்ள எல்லா கவிதைகளும் திண்ணை மற்றும் வார்ப்பு இணைய இதழ்களில் பிரசுரமாகியுள்ளன. பார்க்க:**
www.thinnai.com
www.vaarppu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் இலக்கிய நினைவுகள்...

***1977 ஜூன் - ஜூலை:***
**ஸாஹிறா** இலக்கிய இதழில்
"அவன் என்ன செய்துவிட்டான்" சிறுகதை.
முதல் இலக்கியப் படைப்பு.
வயது 18 - பாடசாலை மாணவப் பருவம்.

***1977 அக்டோபர்:***
**உள்ளம்** இலக்கிய இதழில்
"உயரத்திலிருப்பவன்" உருவகக்கதை.
(சகோதரர் எம். ஐ. எம். முஸம்மில் அவர்களின் உருவகக் கதைகளின் தாக்கம்.)

***1978 ஏப்ரல்:***
**வெண்ணிலா** சஞ்சிகை 1வது இதழ் வெளியீடு.
இதழ் ஆசிரியர் "காவியன்" என்ற புனைப் பெயருடன்.

***1978 மே - ஆகஸ்ட்:***
**2வது இதழில்** "அவனுக்கே புரியவில்லை" சிறுகதை.
இது ஓர் ஏழைத் தொழிலாளியின் சகிப்பு.

***1978 செப்டம்பர் - நவம்பர்:***
**3வது இதழில்** "அது ஒரு..." குட்டிக்கதை.
இளமையின் துடிப்பு எழுதத் தூண்டிய கதை.

எஸ். அகஸ்தியர்
சோலைக்கிளி அதீக்
மருதூர் வாணன் (ஆசிரியர்-சமாதானம்)
க. ஐ. யோகராஜா ஐயர் (ஆசிரியர்-வானோசை)
பாண்டிருப்பு கே. சகாதேவன்
எம். சி. எம். எம். அப்துல் காதிர் (ஆசிரியர் அல்-மருதமுனை)
எம். எம். அபுல் கலாம் (சட்டத்தரணி)
எம். எம். எம். உவைஸ் (ஓய்வுநிலை கிராமசேவகர்)
எருக்கலம்பிட்டி எம். எம். வஜீபு
பாண்டிருப்பு த. விக்ரர்
செங்கலடி ஏ. பி. சந்திரா
வறக்காப்பொளை எம். ஐ. நஸீறா
அக்குறனை அலிறிஸாப்
ஒலுவில் அமுதன் (இலங்கை வங்கி)
ஸ்டார் பரீத் (இலங்கை வங்கி)

**இவர்களுடனான பரிச்சயம்.**

**1978 நவம்பர் 23:**
சொல்லொணாத் துன்பம்...
பாதுகாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகளை இரையாக்கிக் கொண்ட சூறாவளி.

**1978 - 79:**
மருதமுனை இளம்பிறை அச்சகத்தில் எழுத்துப்பிழை திருத்துபவராகவும் விளம்பர வடிவமைப்பாளராகவும் வேலைசெய்த காலகட்டம்.

உமா வரதராஜன்
பாவலர் பஸீல் காரியப்பர்
உஸ்மான் சாஹிப்
மருதமுனை மஜீத் (ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)
எம். எச். காதர் இப்றாகிம் (ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்)
மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்
மருதூர் பாரி (ஆசிரியர் - முனைப்பு)
மருதூர்க் கொத்தன்
மருதூர்க் கனி (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

**இவர்களுடனான அறிமுகம்.**

**1980:**
தமிழ் மொழியின்பால் கொண்ட ஈர்ப்பினால், விஞ்ஞானக் கல்வி கற்கும்போதே, அருட்சகோதரர் கலாநிதி எஸ். ஏ. ஐ. மத்தியு அவர்களிடமும் பின்னர் நற்பிட்டிமுனை நல்லரட்ணம் ஆசிரியர் அவர்களிடமும் தமிழ் இலக்கியம் கற்றமை.

**1995:**
தகவல் தொழிநுட்பத்தினால் கவரப்பட்டு கணனி வரைகலை (Computer programming) மற்றும் வன்பொருள் பொறியியல் (Hardware Engineering) டிப்ளோமா கற்கைகளைப் பூர்த்தி செய்தமை.

தொடர்ந்து எட்டு (8) கணனி மற்றும் மென்பொருள் சம்பந்தமான புத்தகங்களை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதி வெளியிட்டமை.

***1999 ஜுலை:***
"கொம்பியூட்டர் கவிதைகள்" - சிறு கவிதை நூல் வெளியீடு. கவிதைகள் கணனி வரைகலை மூலம் வடிவமைக்கப்பட்டன.

***2004 ஆகஸ்ட்:***
*29-08-2004* தொடக்கம் குறிப்பாக புதிய படிப்பு வட்டம், புதுப்புனைவு இலக்கிய வட்டம் போன்ற இலக்கிய வட்டங்களினால் நடாத்தப்பட்ட கவியரங்குகளில் கலந்து கொண்டமை.

அம்ரிதா ஏஎம்
பி. எம். எம். ஏ காதர்
நளீம் எம் பதுறுதீன்
எம். ஐ. எம். றவூப்
மருதமுனை ஹஸன்
எம். எச். ஏ. கரீம்
ஏ. எம். எம். குர்ஸித்
சத்தார் எம் பிர்தௌஸ்
மருதமுனை முபீன்
புன்னகை வேந்தன்
அலறி
அறநிலா
ஈழக்குயில் இத்ரீஸ்
றகுமான் ஏ ஜப்பார்
ஜெஸ்மி மூஸா
றஸ்மி மூஸா
மருதமுனை மூஹிர்
ஏ. ஆர். ஏ. ஹமீட்
அஸ்லம் ஸஜா
கலைதாசன் ஹக்கீம்
மருதமணாளன் றபீக்
றியாஜத்கான்
ஏ. எல். எம். றியலாஸ்
ஏ. எம். தமீம்

**இவர்களுடனான இலக்கிய நட்பு,**

பாலமுனை பாறூக்
டீன் கபூர்
விஜிலி
றகுமான் ஏ ஜெமீல்
எம் எம் ஜெஸ்மின்

**இவர்களுடனான நட்பு கலந்த கருத்துப் பரிமாற்றம்.**

கவிவேந்தர் எஸ். ஏ. ஆர். எம். செய்யித் ஹஸன் மௌலானா
எம். ஐ. எம். முஸாதிக் (லேக் ஹவுஸ்)
எம். ஐ. எம். முஸம்மில் (இறைவரித் திணைக்களம்)
எம். ஐ. எம். வலீத் (ஆசியா பவுண்டேசன்)

**குடும்ப உறவுக்கப்பாலான இவர்களது ஊக்குவிப்பு.**

***2005:***
*26-12-2004* - சுனாமி விட்டுச் சென்ற என் மருதமுனைக் கிராமத்தின் மண் மணம் மற்றும் உருமாறிய உறவுகளின் வன்மம்.

***2006:***
கவிதைத் தொகுப்பிற்கான முயற்சி. கைகூடவில்லை.

***2019:* "நிலவு அவள்" - உதயம்.**
மருதமுனை எஸ் ஏ ஹப்பார் கவிதைகள்
தொகுதி-*1* வெளியீடு.

**"நினைவுகள் ஒருபோதும்**
**சாவதில்லை - அவை**
**நெஞ்சில் மாறாச்**
**சாதலாய் உள்ளவரை"**

அன்புடன்,

செ. ஆ. அப்துல் கப்பார்.
(ஓய்வுநிலை முகாமையாளர், இலங்கை வங்கி.)
*378/2*, ஸம் ஸம் வீதி,
மருதமுனை-*03*.

*09-01-2019.*

....நினைவுகள் தொடரும்! தொகுதி 2இல்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**நூலாசிரியரின் பிற நூல்கள்:**


1. A Guide to PC users (Tamil)
2. A Guide to PC users (English)
3. Quick reference to MS Excel 2000 (Tamil)
4. Quick reference to MS Excel 2000 (English)
5. Quick reference to MS Word 2000.
6. Quick reference to MS Access 2000
7. இன்ரநெட்டும் ஈமெயிலும்
8. கொம்பியூட்டர் கவிதைகள்










Printed by :
Jesa Grafix
Graphic Designing & Printing
289, Main Street, Maruthamunai.
Tel : 0675675755, 0756569393

9 786249 527201

Digitized by Noolaham Foundation.